**ARTICLE 22 | Research Article – Peer Reviewed | Article ID: TAJP-2026-00031**
Vol. 20, No. 01 (October 2026) – Part I | pp. 121–127
Received: 30 September 2026 • Accepted: 1 October 2026

# புதியமாதவியின் 'ரசூலின் மனைவியாகிய நான்' நாவலில் பெண் உளச் சிக்கல்கள்

**அனுமோள் ஆ[1,*], முனைவர் .சீனிவாசன் ச.பொ[2]**

[1]முனைவர் பட்ட ஆய்வாளர்,தமிழ்த்துறை, பல்கலைக்கழகக் கல்லூரி, திருவனந்தபுரம், கேரளா. (கேரளப் பல்கலைக்கழகத்துடன் இணைவு பெற்றது), India

[2]துறைத்தலைவர், தமிழ்த்துறை, பல்கலைக்கழகக் கல்லூரி, திருவனந்தபுரம், கேரளா. (கேரளப் பல்கலைக்கழகத்துடன் இணைவு பெற்றது), India

***Corresponding author / தொடர்பு ஆசிரியர்:** அனுமோள் ஆ — anumolanandhan@gmail.com

## Abstract

The novel reflects the 2008 Gujarat bomb blasts, the plight of the affected families, and the internal and external pain they endured. In particular, it addresses issues such as caste and religious discrimination in society, the state of mind of widows, remarriage, male-female relationships, and the way society approaches these matters.

## ஆய்வுச் சுருக்கம்

ஜூலை, 2008 - குஜராத்தில் நடந்த குண்டுவெடிப்பு சம்பவத்தையும், அந்தக் குண்டுவெடிப்பில் பாதிப்பிற்குள்ளான குடும்பங்களின் அவலநிலையினையும், அவர்களுக்கு ஏற்பட்ட அக, புற வலிகளையும் பிரதிபலிக்கும் வகையில் நாவல் அமைந்துள்ளது. குறிப்பாக சமூகத்தில் சாதி மதப் பாகுபாடு, விதவைப் பெண்களின் மனநிலை, மறுமணம், ஆண், பெண் உறவுநிலை, அதனைச் சமூகம் அணுகும் முறை உள்ளிட்ட சிக்கல்கள் விளக்கப்பட்டுள்ளன.

**Keywords / திறவுச் சொற்கள்:** புதியமாதவி; ரசூலின் மனைவியாகிய நான்; பெண்ணியம்; ஆவுடை அக்காள்

**How to cite / மேற்கோள் காட்டும் முறை:** ஆ, அ., & ச.பொ, மு. . (2026). புதியமாதவியின் 'ரசூலின் மனைவியாகிய நான்' நாவலில் பெண் உளச் சிக்கல்கள். Tamilmanam International Research Journal of Tamil Studies, 20(01), Volume 1, –.

## புதியமாதவி

புதியமாதவி திருநெல்வேலி மாவட்டத்தைச் சேர்ந்தவர். தற்போது மும்பையில் வாழ்ந்து வருகிறார். சிறந்த கவிஞரும் எழுத்தாளருமான இவர் கவிதைகள், சிறுகதைகள், நாவல்கள், கட்டுரைகள், மொழிபெயர்ப்புகள் முதலிய இலக்கியத் தளங்களில் சிறந்த எழுத்து பணியைச் செய்து கொண்டிருக்கிறார். இவரது படைப்புகள் அனைத்தும், சமூகம், அரசியல், பெண்ணியம், அடித்தள மக்களின் வாழ்வியல் முதலியவைகளைச் சமகாலச் சிந்தனைகளோடு முன் வைப்பவை. இவர் சிற்பி இலக்கிய விருது, பெரியார் விருது, சிறந்த பெண் எழுத்து விருது முதலிய ஐந்துக்கும் மேற்பட்ட விருதுகளைப் பெற்ற பெண்ணிய எழுத்தாளர்களில் குறிப்பிடத்தக்கவர். பச்சைக்குதிரை, சிறகொடிந்த வலசை, மக்ஃபி முதலிய நாவல்களை எழுதியுள்ளார். புதியமாதவியின் 'ரசூலின் மனைவியாகிய நான்' என்னும் நான்காவது நாவல் 2025-இல் வெளியிடப்பெற்றுள்ளது.

## ரசூலின் மனைவியாகிய நான்

ரசூல், கவுரி இருவரும் காதல் திருமணம் செய்துகொண்டவர்கள். எதிர்பாராத விதமாக நடந்த ரயில் குண்டுவெடிப்பு விபத்தில் சிக்கிய ரசூல் கோமா நிலைக்குப் போய்விடுகிறான். உயிர் இருந்தும் உணர்வில்லாமல் இருக்கும் அவனை நினைத்து கவுரி கவலைப்படுகிறாள். ரயில் விபத்தில் பலியானவர்களில் ரசூலின் நண்பன் காம்ப்ளேவும் உண்டு. அவன் மனைவி புஷ்பா, அவளின் குழந்தை தன்வி யாருமின்றி தவிக்கின்றனர். வேலையின்றி பொருளாதார சிக்கலில் தவிக்கிற புஷ்பாவிற்கு, அவள் கணவன் வேலைசெய்த கம்பெனியில் இருந்து உதவித்தொகை கிடைக்கிறது. அவளுடைய மகளுக்கு ஒரு பாதுகாப்பு வேண்டும் என்று கணவனின் தம்பியை மறுமணம் செய்து கொள்கிறாள். அவனிடமிருந்து புஷ்பாவிற்கு அன்பு, பாதுகாப்பு எதுவும் கிடைக்கவில்லை. இதற்கிடையில் கவுரி இரண்டு ஆண்களைச் சந்திக்கிறாள். அவள் மனம் அலைபாய்ந்தாலும் மறுமணம் செய்து கொள்ள வேண்டும் என்ற எண்ணம் ஒருபக்கம் இருக்க, மறுபக்கம் உயிரோடு இருக்கும் ரசூலின் மீதுள்ள காதலில் அவள் இறுதிவரை ரசூலின் மனைவியாகவே வாழ்ந்து விடுகிறாள்.

## சமூகத்தில் சாதி, மதப் பாகுபாடு

நாவலின் முதன்மைக் கதைமாந்தர்களாக ரசூல் - கவுரி, புஷ்பா - காம்ப்ளே அவர்களின் மகள் தன்வி, ருக்மணிபாட்டியும், துணைமைக் கதைமாந்தர்களாக கவுரியின் மாமனார், காம்ப்ளேவின் தம்பி, மங்கத்ராமின் மனைவி, ராமச்சந்திர யுச்சில், ராகுல் ஆகியோர் இடம்பெறுகின்றனர்.

சாதி, மதம் ஆகிய இரண்டும் ஒருவர் தங்கும் இடத்தை முடிவுசெய்யும் அளவிற்கு சமூகத்தில் தாக்கத்தை செலுத்தி இருப்பது மிகவும் அச்சுறுத்தலான நிகழ்வாகும். காலம் மாறி அறிவியல் யுகமாக உருவானாலும், மக்கள் மனதில் சாதி, மத ஏற்றத்தாழ்வுகளில் எவ்வித மாற்றமும் ஏற்படவில்லை என்பதை நாவலின்வழி அறிந்துகொள்ள முடிகிறது. “வீடு வாடகைக்குப் பார்க்கும்போது மட்டும் ரசூல் என்ற பெயரைக் கேட்டவுடனேயே... வீட்டுச் சொந்தக்காரர்கள் முகம் மாறியதை இருவரும் கவனித்தார்கள். அப்படி ஒரு நாளில்தான் அவன் தன் பெயரை ராகுல் என்று சொன்னான். வீட்டுக்காரருக்கு எந்தச் சந்தேகமும் வரவில்லை"1 என்னும் உரையாடலின் மூலம் இஸ்லாம் மதத்தைச் சார்ந்தவருக்கு வீட்டை வாடகைக்குக் கொடுக்க பிற மதத்தைச் சார்ந்தவர்கள் சற்று யோசிக்கிறார்கள் என்பதைப் புரிந்துகொள்ள முடிகிறது. எனவே, ஒருவரின் உண்மையான அடையாளத்தை மறைத்தும், மாற்றியும் ஒரு இடத்தில் வசிக்க வேண்டிய கட்டாயத்திற்கு அவர்கள் தள்ளப்படுகின்றனர். ‘ரசூல்’ என்ற பெயருக்குக் கிடைக்காத வீடு ‘ராகுல்’ என்ற பெயருக்குக் கிடைக்கிறது. இது போன்ற செயல்கள் இன்றைய காலகட்டத்திலும் நடந்துகொண்டுதான் இருக்கின்றன. ஒருவரின் பெயரை வைத்தும், அவர்களின் பழக்கவழக்கங்களை வைத்தும், அவர்களின் மதத்தையும் ஜாதியையும் தீர்மானிக்கிறார்கள். அவ்வாறு செய்வதால், மற்றவர்களுக்கு ஏற்படுகின்ற பின்விளைவுகளையோ மனப் பாதிப்புகளையோ அவர்கள் உணர்வதில்லை.

சமூகத்தில் திருமணம் நடைபெறும்போது, பெரும்பாலும் ஒரே சாதி, மதம் பார்த்து நடத்தப்படுகிறது. ஒருவேளை, மதம் மாறி திருமணம் செய்து கொள்கிறவர்கள் அவர்களின் பொருளாதாரத்தைப் பொறுத்து ஆணோ, பெண்ணோ மதம் மாறி திருமணம் செய்து கொள்கிறார்கள். இப்படிப்பட்ட சூழலில் கவுரி, ரசூல் இருவரும் தங்களின் மதத்தை மாற்றிக் கொள்ளவில்லை. அவர்கள் இருவரும் காதல் - அன்பு என்ற உணர்வுகளுக்கு இடையே, மதத்தைப் பொருட்படுத்தாமல் திருமணம் செய்து கொள்கிறார்கள். மதமும் சாதியும் மட்டும் ஒருவரின் வாழ்க்கையை நிர்ணயிப்பதில்லை. அதற்கு அப்பாற்பட்டு, பல நுண்ணிய உணர்வுகள் வாழ்க்கையை தீர்மானிக்கின்றன என்பதை ரசூல் - கவுரி கதாபாத்திரங்கள்வழி புரிந்துகொள்ள முடிகிறது.

## விதவைப் பெண்களின் மனநிலை

இளம்வயதில் விதவையான ருக்மணி பாட்டி, கணவன் இருந்தும் - இல்லாமல் இருக்கும் கவுரி, கணவனை இழந்து துயரப்படும் புஷ்பா ஆகியோரின் மனநிலையை நாவலின் தொடக்கத்திலிருந்து இறுதி வரையிலும் உணர முடிகிறது.

திருமணம் ஆகியும் குழந்தை இல்லாத கவுரி, கைக்குழந்தையோடு இருக்கும் புஷ்பா அவர்களின் இருவேறுபட்ட பெண்களை இங்குக் காண முடிகிறது. கணவனை இழந்து தவிக்கும் பெண்ணின் மனநிலையும், கணவன் இருந்தும் -இல்லாமல் இருக்கும் பெண்ணின் மனநிலையும் இங்கு ஒப்புநோக்கத்தக்கது. கவுரியின் கணவன் ரசூல் கோமாவில் உணர்வுகளற்றுக் கிடக்கும் அந்த வலியும், அவனுடன் வாழ்ந்த நினைவுகளும் அவளைத் தினமும் கொல்கின்றன. அதுபோல புஷ்பா கணவனை இழந்து கைக்குழந்தையுடன் இளம் விதவையாக நிற்கின்ற நிலை, பொருளாதாரச் சிக்கல், குழந்தையை இனி எப்படி வளர்க்கப் போகிறோம் என்ற கவலை அவளுக்குள் வலியை ஏற்படுத்துகிறது.

கவுரி கோமாவில் இருக்கும் கணவனைப் பார்க்க மருத்துவமனைக்குச் செல்கிறாள். அங்கு ரசூலைப் போலவே, மேரி என்ற பெண்ணும் கோமாவில் இருப்பதையும், அவளின் கணவன் அவளை வந்து பார்த்துவிட்டுச் செல்வதையும் கவுரி பார்க்கிறாள். இதைக் கண்ட கவுரிக்கு அவனுடைய நிலையும் தன்னைப் போலவே இருக்கிறது என்று உணர்கிறாள். தனிமையில் இருக்கும் ஆண், பெண் இருவரும் ஒருவரையொருவர் சந்திக்கின்ற பொழுது, ஏதோ பல உணர்வுகள் அவர்களுக்குள் அலை மோதுவதுண்டு. அவ்வகையில், இருவர் மனதிலும் ஏதோ ஒரு உணர்வு அலை மோதுகிறது. இதுபோலவே, கவுரிக்கு மற்றொரு நிகழ்வும் நேர்கிறது. கம்பெனி மேனேஜரான ராகுலைச் சந்திக்கும் பொழுதும் அவர்கள் இருவர் மனதிற்குள்ளும் காதல் உணர்வு உருவாகிறது. ஆனால், ரசூலை நினைக்கும் பொழுது அவள் அதை அப்படியே மனதுக்குள் புதைத்து விடுகிறாள். ஏனெனில், ரசூலின் மீது அவள் வைத்திருந்த காதலும் மற்றும் சமூகம் அவளை எவ்வாறு பார்க்கும் என்ற எண்ணமும் அவள் மனதுக்குள் இருந்துகொண்டே இருந்திருக்கிறது.

தனிமை என்பது ஆணுக்கும் பெண்ணுக்கும் ஒரே உணர்வுகளை கடத்துகின்றது. மன அமைதி, ஆறுதல் இதை அவர்களின் மனம் எதிர்பார்க்கின்றது. ருக்மணி பாட்டி இளம்வயதில் விதவையானவர்.

Vol. 20, No. 01 (October 2026) – Part I • ISSN 3049-0723 (Online) • ISSN 3107-7781 (Print)

விதவையின் வருத்தத்தையும் ஏக்கத்தையும் தீர்க்க அவர் அடிக்கடி ‘ஆவுடை அக்காள்’ பாடல்களைக் பாடிக்கொள்வார். ஆவுடை அக்காள் என்பவர் செங்கோட்டையைச் சேர்ந்தவர். பதினெட்டாம் நூற்றாண்டில் வாழ்ந்தவர். பக்தி, யோகா, ஞானம், வேதாந்தம், ஸமரஸ் போன்ற பாடல்களை இயற்றியுள்ளார். ஆவுடை அக்காள் இளம்வயதில் விதவையானவர்தான். விதவையாக இருப்பவர்களின் சோகத்தையும், அதன் தாக்கத்தையும் அவர் இயற்றிய பாடல்களில் காணமுடிகிறது. எனவே, அந்தக் காலத்தில் 'சுந்தரபாண்டியபுரம், சாம்பூர், வடகரை, ஆம்பூர் ஆழ்வார்குறிச்சி நாகர்கோவில், வடுவீஸ்வரம், முன்னீர்பள்ளம், கல்லிடைக்குறிச்சி முதலிய கிராமங்களில் உள்ள விதவைகள் மத்தியான உணவுக்குப்பின் பத்துப் பெண்கள் கூடி உட்கார்ந்து அக்காள் பாடல்களைப் பாடி தங்கள் சோகத்தையும் தாகத்தையும் தீர்த்துக் கொண்டதாக அம்மா அடிக்கடி சொல்வாள்”2 இதை நாவலாசிரியர் ருக்மணி பாட்டி பாடிக்கொண்டு இருப்பதாக வெளிக்காட்டியுள்ளார்.

“ஆசையானேன் வெங்கடேச ஸ்வாமி மேலாசை ஆனேனே... ஆனேனே... ஆசை ஆனேனே.. என்று பாடிக்கொண்டே வரும் பாட்டி அடிக்கடி ராகத்தை மாற்றிக் கொள்வாள். ‘தேகத்தை விடும்போது தரிசனம் எனக்குத் தந்து மோக்ஷத்தை வெல்லாமல் மோசம் போகாதே’னு பாட்டி சோகத்தில் பாடிக்கொண்டே கைவேலைகள் செய்வாள். தேகத்தைக் கொன்றுவிடு... அல்லாமல் குருணான மோகத்தை விட்டுவிடு... தேகத்தைக் கொன்றுவிடு"3 என்பது ஆவுடை அக்காளின் பாடலாக நாவலில் இடம்பெறுகிறது.

ஆவுடை அக்காளின் தத்துவக் கருத்துகளின் தாக்கம் பாரதியாருக்கு ஏற்பட்டிருக்கிறது. பாரதியின் பாடலில், “மோகத்தை கொன்று விடு அல்லால் /என்றன் மூச்சை நிறுத்திவிடு / தேகத்தை சாய்த்திவிடு அல்லால் / அதில் சிந்தனை மாய்த்துவிடு"4 என்றவாறு வெளிப்படுகிறது. விதவைகளாக இருப்பவர்கள் மற்றும் தனிமையில் ஏங்குகிறவர்கள் பாடுகின்றனர். கவுரிக்கு கணவனோடு இருந்த அந்நினைவுகள் வருகிறது. அவள் உடலும் உயிரும் படும் அவஸ்தையை தீர்க்க மேலே குறிப்பிடப்பட்டிருக்கும் பாடல் வரிகளைப் பாடி துக்கத்தில் அழுகிறாள். அவளின் அழுகைக்குப் பின்னால் கணவன் இல்லை என்ற சோகம், அவள் ஆறுதல் அடைவதற்குக் குழந்தை இல்லை என்ற சோகமும் அவளைத் துயரத்தில் ஆழ்த்துகிறது. எனவே, பெண்கள் விதவையாக வாழ்நாள் முழுவதும் வாழ்வது தாங்க முடியாத துன்பமாக இருந்து வருகிறது.

## சமூகத்தில் விதவைகளின் நிலை

இன்றைய காலகட்டத்தில் அதிநவீன கணினியுகத்தில் பெண்களின் நிலை பெரும்பாலும் மாறிவிட்டது. நகரத்தில் வாழும் பெண்களுக்குச் சுதந்திரம் கிடைக்கிறது. இன்றும் கிராமத்தில் பெண்களின் வாழ்வில் எந்த மாற்றமும் ஏற்படவில்லை. இதனையே நாவல் பதிவுசெய்கிறது. கணவனின்றி விதவையாக இருப்பதுகூட அவர்களுக்குத் துயரம் தருவதில்லை. ஆனால், சமூகத்தில் விதவைகளை ஒதுக்கி வைப்பதுதான் பெருந்துயரம். சாஸ்திரம் பார்க்கிறவர்கள் நல்ல காரியங்களுக்கு விதவைகளை ஒதுக்கி வைப்பதுண்டு. அது அவர்களுக்கு இன்னும் பல வலிகளை தருகின்றன. திருமணம், பூப்புச் சடங்கு, வளைகாப்பு, கோவில் திருவிழா முதலிய மங்கள நிகழ்விற்கு அவர்களை அழைப்பதோ, மரியாதை

தருவதோ இல்லை. அவர்கள் அதில் கலந்து கொண்டால் மங்கள நிகழ்வு அமங்கலமாகிவிடும் என்று சமூகத்தில் உள்ளவர்கள் கருதுகின்றனர்.

“இந்த ஐந்து வருடங்களில் அவளை யாருமே இம்மாதிரி திருமண வீட்டுக்கு அழைத்ததில்லை. அவள் வீட்டுக்கு அழைப்பிதழ் எடுத்துக்கொண்டு யாரும் வந்ததில்லை."5 என்று கவுரியின் மன வருத்தத்தை விதவைகளின் மன வருத்தமாக நாவலாசிரியர் வெளிப்படுத்துகிறார். சமூகத்தில் இந்நிலை மாற வேண்டும் என்பதை மங்கத்ராமின் மனைவியின் வாயிலாக எடுத்துக்காட்டியுள்ளார். அவர் வீட்டில் நடக்கப் போகும் திருமணத்திற்கு முறையாக கவுரிக்கு அழைப்பிதழைக் கொடுக்க வருகிறார். இதைக் கண்ட கவுரி, அதிர்ச்சியில் கை நடுக்கத்துடன் தாம்பளத் தட்டை வாங்கி அழைப்பிதழைப் பிரித்துப் பார்க்க தோன்றவில்லை. அன்றைய காலத்தில், கணவன் இறந்துவிட்டால் மனைவி உடன்கட்டை ஏறுகின்ற மரபு இருந்திருக்கிறது. சட்டத்தால் தடைவிதிக்கப்பட்டபின் கைம்மை நோன்பு சமூகத்தால் கொண்டுவரப்பட்டிருக்கிறது. உடன்கட்டை ஏறுவதைக் காட்டிலும் மிகக் கொடுமையானது கைம்மை நோன்பு அனுபவம் ஆகும். வுறதவைகளாக இருக்கும் பெண்கள் வெள்ளைச் சேலையை உடுத்துதல், தலையை மொட்டையடித்துக் கொள்ளுதல், தலையில் பூ வைத்துக் கொள்ளாமல் இருத்தல் உள்ளிட்ட பல்வேறு செயல்களின் மூலம் கணவனை இழந்து விதவைப் பெண்களைச் சமூகம் தனிமைப்படுத்தியது.

“கணவன் இறந்தபின் பதிவிரதைகள் விதவா தர்மத்தை அடைந்து நாள்தோறும் பேசாமல் மௌன ஸ்நானம் (உடம்பு முழுதும் மண்ணைப்பூசிக் கொள்வது) ஜலத்தில் உத்தமமான அஞ்சலி ஸ்நானத்தையும் (இரு கைகளாலும் நீரைத் தலையில் இறைத்துக் கொள்வது) செய்ய வேண்டும். அதன்பிறகு தன் கணவனைப் பற்றிய விவரத்தையும், நியமத்தையும் செய்ய வேண்டும்.”6 என விதவைகளுக்குக் கூறப்படும் விதவா தர்மத்தில் குறிப்பிட்டிருப்பதாக கி.வீரமணி அவர்கள் குறிப்பிட்டுள்ளார். இவ்வாறு செய்வதால் பெண் மோட்சம் அடைந்து விண்ணுலகத்தை அடைவாள் என்பது நம்பிக்கை. இது எவ்வளவு பெரிய தவறாக இருந்திருக்கிறது. இதுபோல பல இதிகாச, புராணங்கள் மற்றும் பலர் அவர்களின் விருப்பப்படி ஒவ்வொரு கருத்துக்களையும், சாஸ்திரங்களையும் உருவாக்கி வைத்துவிட்டுப் போகின்றனர். அதுவே காலப்போக்கில் நடைமுறைக்கு வந்து விதவையாக துயரத்தில் இருக்கும் பெண்களுக்கு மேலும் மனக்கசப்பை உருவாக்குகிறது.

கணவனை இழந்த பெண்கள் ஆடை அலங்காரத்துடன் மகிழ்ச்சியாக இருப்பதை இச்சமூகம் ஏற்பதில்லை. அவர்கள் சோகத்துடனும் எவ்வித அலங்காரமுமின்றி இருப்பதையே இச்சமூகம் விரும்புகிறது. மாறாக, அவர்கள் அலங்காரம் செய்து கொண்டால், அவர்களைச் சமூகத்தில் உள்ளவர்கள் இழிவாக எண்ணுகின்றனர். அழகுபடுத்திக் கொள்ளாமல் இருப்பதே கணவனை இழந்த துயரத்தில் அவன் மீது அளவு கடந்த அன்பு வைத்திருப்பதாக சமூகம் கருதுகின்றது. ஆனால், உண்மையில் இது சமூகச் சித்திரிப்பே தவிர, ஒருவரின் வருத்தம் அவர்கள் அணியும் ஆடையிலோ அலங்காரத்திலோ கிடையாது.

இவ்வாறு சமூகத்தின் தவறான பார்வையால் பல விதவைகளும் தங்களின் உண்மைத்தன்மையை மறைத்து அவர்களின் சுயத்தை இழந்து சமுதாயத்திற்காக தங்களின் வாழ்க்கையை வாழ்கின்றனர். கவுரியும் அவ்வாறு இருந்திருக்கிறாள். கவுரியின் சிந்தனைகளை மாற்றுகின்ற கதாபாத்திரமாக நாவலின் இறுதியில் தன்வி காணப்படுகிறாள். கணவன் இருந்தும் இல்லாமல் தவித்த கவுரியின் வாழ்க்கை சுமார் 20 வருடங்களுக்கு மேலாகிவிடுகிறது. அவள் அவனின் நிலையை நினைத்தும், அவனோடு வாழ்ந்த நினைவுகளோடு மட்டுமே வாழ்ந்தாளே தவிர, தன்னை அலங்கரித்துக் கொள்ள வேண்டும் என்ற எண்ணம் அவளுக்கு தோன்றவே இல்லை. புஷ்பா தன் மகள் தன்வியைச் சூழ்நிலையால் கவுரியிடம் ஒப்படைக்கிறாள். தன்வியை வீட்டில் வைத்து வளர்க்கும்பொழுது, கவுரியின் மன ஆறுதலுக்கும் அவளின் சிந்தனைகளை மாற்றுவதற்கும், தன்வி முக்கியப் பங்காற்றுகிறாள் என்பதை நாவலின்வழி அறிய முடிகிறது.

“கி.பி. 1986-இல் சென்னை மாவட்டத் திராவிடர் கழக மகளிர் அணி சார்பில் பெரியார் திடலில், பெண்கள் விடுதலை மாநாடு நடைபெற்றது. இம்மாநாட்டு நிகழ்ச்சியில் விதவைகளுக்குப் ‘பூக்கள்’ வழங்கப்பட்டன. இவ்வாறு செய்வதன் மூலம் விதவைச் சகோதரிகளின் சிந்தனையில் ஒரு புதுத் திருப்பம் ஏற்படுத்தப்பட்டது."7 விதவைப் பெண்களின் தவறான எண்ணத்தையும், சமூகத்தின் மூடநம்பிக்கையையும் உடைத்தெரிந்து விதவைப் பெண்கள் சுதந்திரமாகச் செயல்படுவதற்கும், அவர்கள் மறுமணம் செய்துகொள்வதற்கும் தந்தை பெரியார் பெரும்பணியாற்றி இருக்கிறார் என்பது குறிப்பிடத்தக்கது.

## மறுமணம்

நாவலில் ஒரு பெண் மறுமணத்திற்குத் தயங்குகிறாள். மற்றொரு பெண் மறுமணம் செய்துகொள்கிறாள். “மறுமணம் செய்துகொள்ள விரும்பும் பெண்களுக்குத் தாராளமாய் மணஞ் செய்துகொள்ள இடமளிக்க வேண்டும் என்பதே நமது கோரிக்கை”8 என்பது பெரியாரின் கருத்து. கவுரி மறுமணத்திற்குத் தயங்க, புஷ்பா கணவனின் தம்பியை மறுமணம் செய்துகொள்கிறாள். கவுரி மறுமணம் செய்துகொள்ள வேண்டும் என்று அவளது மாமனாரே அறிவுரை கூறுகிறார். “நீ மறுமணம் செய்து கொள்ள வேண்டும் கவுரி… ஒரு தகப்பனாக மட்டும் இதைச் சொல்லவில்லை. ஒரு மனிதனாகவும் இதைச் சொல்கிறேன். உங்கள் திருமணம் எப்படி நடந்தது என்று நான் கேட்கப் போவதில்லை...... எங்கள் மதம் இம்மாதிரி ஒரு சூழலில் ஒரு பெண்ணுக்கு அவள் கணவனிடமிருந்து விவாகரத்து பெறும் உரிமையைக் கொடுத்திருக்கிறது. எனவே, இந்த உறவை நீ எப்போது வேண்டுமானாலும் விலக்கி விட்டு உன் வாழ்க்கையை வாழ வேண்டும்… நீ வாழணும்ம்மா”9 என்று கூறுகிறார். கவுரியின் மறுமணத்தைப் பற்றி, அவரது மாமனரே வலியுறுத்துவதாக, நாவலாசிரியர் படைத்துக் காட்டியுள்ளார்.

## தொகுப்புரை

சமூகத்தில் சாதி, மதப் பாகுபாடுகள் இருக்கின்றன என்பதை ரசூல் - கவுரி கதாபாத்திரங்களின்வழி அறிந்துகொள்ள முடிகிறது. விதவைகளுக்குச் சரியான அங்கீகாரம் இல்லை என்று நாவல்

Vol. 20, No. 01 (October 2026) – Part I • ISSN 3049-0723 (Online) • ISSN 3107-7781 (Print)

குறிப்பிடுகிறது. பெண்கள் மங்களகரமாக இருந்தால் மட்டும் சமூகம் அவர்களை அங்கீகரிக்கிறது. அந்நிலை மாற வேண்டும் என்ற நோக்கத்துடன் நாவல் படைக்கப்பட்டிருக்கிறது. விதவைகள் மறுமணத்திற்குத் தயாராக இருக்க வேண்டும் என்றும் நாவல் வலியுறுத்துகிறது.

## அடிக்குறிப்புகள் (Notes)

1. புதியமாதவி, ரசூலின் மனைவியாகிய நான், ப.14
2. மேலது., ப.21
3. மேலது., ப.21
4. www.ta.wikisource.org
5. புதியமாதவி, ரசூலின் மனைவியாகிய நான், ப.24
6. கி. வீரமணி, மகாபாரதத்தில் வர்ண (அ)தர்மமும் பெண்ணடிமையும், ப.41
7. பா. மகாலெட்சுமி (க.), தந்தை பெரியாரும் பெண் உரிமையும், இரா.தாமோதரன் (பதி.), பெரியாரும் உலகப் பகுத்தறிவாளர்களும், ப.113
8. தந்தை பெரியார், பெண் ஏன் அடிமையானாள்?, ப.46
9. புதியமாதவி, ரசூலின் மனைவியாகிய நான், பக். 19, 20

## துணைநூற் பட்டியல் (References)


1. புதியமாதவி, ரசூலின் மனைவியாகிய நான், ஹெர் ஸ்டோரீஸ் பதிப்பகம், முதற்பதிப்பு, மே, 2025
2. கி. வீரமணி, மகாபாரதத்தில் வர்ண (அ)தர்மமும் பெண்ணடிமையும், திராவிடர் கழக (இயக்க) வெளியீடு, மூன்றாம் பதிப்பு, மே, 2004
3. இரா.தாமோதரன் (பதி.), பெரியாரும் உலகப் பகுத்தறிவாளர்களும், பாரதிதாசன் பல்கலைக்கழக வெளியீடு, முதற்பதிப்பு, 2011
4. www.ta.wikisource.org


© 2026 அனுமோள் ஆ, முனைவர் .சீனிவாசன் ச.பொ. This is an open-access article distributed under the terms of the CC BY 4.0 licence, which permits use, distribution and reproduction in any medium, provided the original work is properly cited. Published by / வெளியீடு: Department of Library, Nallamuthu Gounder Mahalingam College, Pollachi..